**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் - 2022**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் (“நிறுவனம்”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுக்கான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பந்தி இலக்கம் 25 இல் குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் சொத்துக்களை கைதவிர்ப்பதன் அடிப்டையில் கிடைக்கப்பெற்ற ரூபா 1,241,165 முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக் கப்படாதிருந்ததுடன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கைதவிர்த்தலின் அடிப்படையில் ஏற்பட்டிருந்த ரூபா 1,027,097 ஆன நட்டம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கங்களின் கீழ் சேர்க்கப்பட்டு காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அது குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறானவைகளை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் சரியாக இனங்கண்டு கணக்கீட்டு மதிப்பீடுகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப் படுகின்ற கிரயம் ரூபா | இந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்காக காணப்படுகின்ற நடைமுறை ரீதியான வசதியீனங்களின் (தொழில்நுட்ப நிபுணர்களின் சேவை) அடிப்படையில் மற்றும் நாட்டில் காணப்படுகின்ற சிக்கலான நிலைமைகளில் இதனை மேற்கொள்ளுதல் வசதியீனமாக இருந்தது. எனினும் அதற்காக சிறந்த அனுபவமுள்ள சேவை பங்களிப்பாளர் குழுவொன்றின் சேவையினைப் பெற்றுக் | சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் சரியான இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 955,400,832 ஆன நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 35 ஆம் பந்தியின் பிரகாரம் முதல் வந்து முதல் செல்லும் முறை (FIFO) அல்லது நிறையிடப்பட்ட சராசரி முறை (WAC) என்ற இரண்டு முறையில் ஒரு முறையை தெரிவு செய்து பொருள் இருப்பின் கிரயம் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் சராசரி கிரய முறையை பயன்படுத்தி நிறுவனத்தினால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் இருப்புக்கள் ரூபா 40,866,599 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து நிறையிடப்பட்ட சராசரி முறைமையில் இருப்பு மீள்மதிப்பீடு செய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பொருள் இருப்பின் கிரயம் கணிப்பிடப்படல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் கடன்பட்டோர் மீதி ரூபா 66,113,733 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் (கணக்கு குறிப்பு 18A) கடன்பட்டோர் மீதி ரூபா 61,441,660 ஆக காண்பிக்கப்பட்டமையால் கடன்பட்டோர் காலப் | இது கணனி மென்பொருள் வழுக்களாகும். இனங்காணப்பட்ட இந்த வேறுபாட்டை சரிசெய்வதற்கு கணனி மென்பொருள் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற நிலைமையாக | கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வின் மீதியும் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதியும் ஒன்றுக்கொன்று இணங்கும் வகையில் உரிய மீதிகள் பேணிச் |

| | | | |
|---|---|---|---|
| | பகுப்பாய்விற்கும், நிதிக் கூற்றில் கடன்பட்டோர் மீதிக்கும் இடையே ரூபா 4,672,073 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இருந்ததுடன் இந்த வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட இனங்காணப்படாத நேர் வங்கி செலவு வைத்தல் ரூபா 6,068,370 மீளாய்வாண்டின் போதும் நிறுவனத்தால் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் செலுத்த வேண்டிய செலவினமாக நடைமுறை பொறுப்புக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த இனங்காணப்படாத வைப்பு பெறுமதி தற்போது ரூபா 6,068,370 வரை குறைக்கப்பட்டுள்ளது. உரிய வைப்பாளர்களை இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. | இனங்காணப்படாத நேர் வங்கி செலவு வைத்தல்களை சரியான பிரகாரம் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கைகளின் நிபந்தனைகளை மீறியதன் அடிப்படையில் பெறவேண்டிய பெறுமதிகள் கணக்கீடு செய்யும் போது பெறவேண்டிய கணக்கிற்கு மேலதிகமாக கடப்பாடுகளை மீறிய ஒதுக்கக் கணக்கில் இனங்காணப்பட்டிருந்ததுடன் கிடைக்க வேண்டிய பெறுமதி தீர்க்கப்படும் சந்தர்ப்பத்தின் போது அவ்வாறு இனங்காணப்பட்ட ஒதுக்கக் கணக்கு தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நிபந்தனைகளை மீறியதன் அடிப்படையிலான மீதியில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கிடைக்கப்பெற்ற ரூபா 653,058 பெறுமதி கிடைக்க வேண்டிய மீதிகளில் அகற்றப்பட்டிருந்த போதும் ஒதுக்கக் கணக்குகளில் அகற்றப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பெறுமதியில் உரிய பிரகாரம் கணக்கீடு செய்து அது மற்றும் அதற்கு சமமான பெறுமதிக்கு உடன்படிக்கையை மீறிய ஒதுக்க கணக்கு பேணிச் செல்லப்படுகின்றது. உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களிடம் இருந்து மீண்டும் பணம் கிடைத்த பின்னர் பண பெறுவனவு மற்றும் உரிய உடன்படிக்கை மீறிய உத்தியோகத்தர்களின் கணக்குகள் சரியான பிரகாரம் பதியப்பட்ட போதும் உரிய பெறுவனவுகள் ஒதுக்கக் கணக்கில் அகற்றுவதற்கு வசதியீனம் ஏற்பட்டிருந்தது. இது எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | கணக்கீட்டு நடவடிக்கைகளை உரிய பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஆண்டின் போது கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வு பெறுமதி இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக முறையே ரூபா 41,356,730 மற்றும் ரூபா 1,854,560 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் கைதவிர்க்கப்பட்ட இயந்திர உபகரணங்கள், தளபாடங்களும் அலுவலக உபகரணங்களினதும் பெறுமதி முறையே ரூபா 42,200,231 மற்றும் ரூபா 2,338,302 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக நிலையான சொத்துக்களில் தேறிய பெறுமதி ரூபா 1,327,243 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் சொத்துக்களின் பெறுமதி பெறுமானத் தேய்வு கணிப்பிடுவதற்குள்ள வசதியினத்தின் அடிப்படையில் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. எனினும் எதிர்வரும் ஆண்டின் போது இந்த வேறுபாடுகளை சரியான பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக பெறுமானத் தேய்வு பெறுமதியை உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | வாகனங்கள் மற்றும் கணனி மென்பொருள்கள் முறையே வருடாந்தம் 20 சதவீதம் மற்றும் 33 1/3 வீதம் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வாகனம் மற்றும் கணனி மென்பொருளின் கிரயத்தை விஞ்சி ரூபா 7,808,500 மற்றும் 468,062 வீதம் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. | பெறுமானத் தேய்வைக் கணிப்பிடுவதற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கணனி முறைமையின் உதவியை காண்பிக்கப்படா திருந்ததுடன் நிறுவனம் பெறுமானத் தேய்வைக் கணிப்பிடும் போது சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு கணிப்பிடுதல் manually மேற்கொள்வதுடன் மிகவும் கணிசமான சொத்துக்களின் அளவு உள்ளமையால் ஒவ்வொரு சொத்துக்கும் பெறுமானத் தேய்வு கணிப்பிடுவதற்கு உள்ள வசதியினத்தின் அடிப்படையில் இந்த நிலைமை எழுந்திருந்தது. இந்த வேறுபாடுகள் எதிர்வரும் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வு கணிப்பிடல் சரியான பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 903,701,556 ஆக நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் உள்ளபடியாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 995,400,832 ஆகும். | கணக்கு குறிப்புக்களில் உள்ள முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 995,400,832 ஆக சரியாக இருக்க வேண்டியிருந்ததுடன் இது கணக்கீட்டு குறிப்புக்களில் நாளது வரையாக்காமையினால் ஏற்பட்டதாகும். | நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்கள் சரியாக இருத்தல் வேண்டும். |
| (எ) | (i) நிதியாண்டில் கொள்வனவு செய்யப்படாத நடைமுறை வேலைகளில் மூலதனமாக்கப்பட்ட ரூபா 55,317,026 பெறுமதி ஆண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு செய்தலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது தரவுகளைத் தொடர்புபடுத்துகின்ற போது இந்த பெறுமதி கொள்வனவு செய்தலாக சீராக்கப்பட்டமையால் இது ஏற்பட்டிருந்தது. மேலும் எதிர்காலத்தில் இவ்வாறானவைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| | (ii) நிறுவனத்தின் மீளாய்வாண்டில் காசாகக் கிடைத்த முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 23,093,882 பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இது காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பித்தல் தவறவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| | (iii) தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ஆண்டில் பணமாக செலுத்தப்பட்ட பணிக்கொடை மற்றும் ஊக்குவிப்பு படி பெறுமதி ரூபா 26,495,232 ஆக இருந்த போதும் அப்பெறுமதி | தவறினால் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது இது ரூபா 20,670,566 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 20,670,566 ஆக காண்பிக்கப் பட்டிருந்தது. | | |
| (ஏ) | தேசிய உர செயலகத்தின் தேவைகளின் பிரகாரம் 10 நாட்கள் ஆன குறுகிய காலத்தில் விரைவாக சுயாதீன பரிசோதனைக்கு உட்படுத்தி அந்த அறிக்கை உர செயலகத்திற்கு வழங்குவதற்கும் அத் திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு பெற்றுக்கொண்ட உறுதிப்படுத்தலின் அடிப்படையில் நிறுவனத்தால் 2019 ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட அறிக்கைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 4,597,274 தொகைக்குப் பதிலாக பட்டியல் விநியோகிக்கப்பட்டு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், அந்தப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய உர செயலகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற மாதிரிகளுக்காக SS இலக்கம் விநியோகிக்கப்படாமல் அதன் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதற்காகும். உரிய அறிக்கை தேசிய உர செயலகத்திற்கு வழங்கப்படும் வரை மாதிரிகளுக்குரிய மூன்றாம் தரப்பினர் தொடர்பாக எமது நிறுவனம் அறிந்திருக்கவில்லை. தற்போது தேசிய உர செயலகம் கடன்பட்டோருக்கு வருமானத்திற்கு உரிய பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. | வருமானமாக உள்ளடக்கப்பட வேண்டிய சகல பெறுமதிகளும் உள்ளடக்குவதற்கும் வருமானத்தை கூடிய விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 15,053,200 மீதியொன்று கொள்வனவு செய்தல் முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 11 கடன்கொடுத்தோர்களுக்கு செலுத்த வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 1,064,654 தொகையும் அந்த முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 16,117,854 நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த பணம் சீனா இலங்கை செயற்திட்டத்திற்குரியதாக இருந்ததுடன் தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. ரூபா 1,064,654 கூட்டுத் தொகையான 11 செலவு மீதிகள் தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. | சரியான பெறுமதியைக் காண்பிக்குமாறு நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | சீனா இலங்கை உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2019 முதல் மீளாய்வாண்டு வரை ஆராய்ச்சி கூட நிர்மாணத்திற்காக ஒப்பந்தக் கிரயம் மற்றும் ஆலோசனை சேவைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 15,743,200 தொகையும், 2019 ஆம் ஆண்டின் போது சீன அரசாங்கத்திலிருந்து நன்கொடையாகக் கிடைத்த இயந்திர உபகரணங்களை விடுவிப்பதற்கு துறைமுகக் கட்டணம் மற்றும் கொண்டுவரும் வாடகை மற்றும் ஏனைய செலவினமாக செலவிடப்பட்ட ரூபா 7,707,926 தொகையை உள்ளடக்கிய மொத்த செலவினம் ரூபா 23,451,126 நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலையின் கீழ் (work in progress) உள்ளடக்கப்படாமல் பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இது சீன இலங்கை செயற்திட்டமாக இருந்தமையால் தனியான பேரேட்டுக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பிட்ட செயற்திட்ட இறுதியின் போது உரிய கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றது. | -மேற்படி- |
| (ஓ) | நிறுவனத்திற்கு 09 செயற்திட்டங்களுக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 9,015,676 தொகையில் 08 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்து மேலும் மிகுதியாகக் காணப்பட்ட ரூபா 3,490,800 மீதி மற்றும் அந்த கைவிடப்பட்ட செயற்திட்டத்திலிருந்து இந்த எஞ்சிய ரூபா 735,557 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 4,226,357 தொகை மிகையாக இனங்காணப்படாமல் செலுத்த வேண்டிய மீதியின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | FP-126 Minamate Initial Assessment செயற்திட்ட மீதி 2023 இன் வருமானத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை.**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| செலுத்த வேண்டிய மீதி | 8,039,067 | செலுத்த வேண்டிய 08 மீதிகளுக்கான உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல் / பட்டோலைகள் | ஸ்ரீ லங்கா ரெலிகொம், Bank Rejection, Maintenance expenditure coir project, Re-Banking என்ற மீதிகள் 12 வருடங்களை விட பழையதாக இருந்ததுடன் அதற்குரிய தகவல்களைக் கண்டறிவதற்கு முடியாதிருந்தது. Refund customer over payment, மற்றும் 2015 VAT Over payment, இந்த மீதி VAT வரி வீதம் வேறுபடுகின்ற சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட வரித் தொகையாக இருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட சகல வருமதிகளும் உரிய நுகர்வோர்களின் கோரிக்கையின் அப்படையில் செலுத்துவதற்காக இவ்வாறு வேறுபடுத்தப் பட்டிருந்தது. DMS30 Resigned/ Present Eemployee பெறுமதி DMS30 சுற்றறிக்கையின் பிரகாரம் முன்னாள் இருந்த உத்தியோகத்தர்களின் பதவிகளில் தரம் மாற்றமடைந்ததன் | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்துதல் நிறுவனத்திற்கு உரிய பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அடிப்படையில் செலுத்துவதற்கு ஏற்படக்கூடிய நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கமாகும்.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய மீதியில் காணப்படுகின்ற 01 முதல் 08 வருடங்கள் வரையான காலம் பழைய கூட்டுமொத்தமான ரூபா 14,535,683 ஆன நானாவித கடன்பட்டோர் மீதியை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வெளிநாட்டு புலமைப்பரிசில் கணக்குகளின் நிபந்தனைகளை மீறிய 20 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 16,599,429 ஆன பணம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 11,300,214 தொகையை வழங்குமாறு பலதடவை எழுத்து மூலம் கோரப்பட்டிருந்து. 10 வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற மீதியில் எதிர்வரும் ஆண்டின் போது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. மீள செலுத்த முடியுமான விமானப் பயணச் சீட்டுக்கான பணம் எதிர்வரும் விமான பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது, இந்த தொகையை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. அறவிட வேண்டிய ரூபா 4,020,392 தொகையை 17 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு அந்த உத்தியோகத்தர்கள் நாட்டை விட்டுச் சென்றமையால் முடியாதிருந்தது. அவர்களில் அநேகமான பிணையாளர்களும் நாட்டில் இருந்து வெளியே சென்றிருந்ததுடன் சிலர் | பெறவேண்டிய மீதிகளை கூடிய விரைவில் அறவிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணாமல் போயுள்ளனர். ரூபா 12,541,165 பெறுமதியான உடன் படிக்கையை மீறியை மீறிய இரண்டு உத்தியோகத்தர்களுக்காக தேவையான நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. அதில் ஒரு உத்தியோகத்தர் உடன்படிக்கையின் பிரகாரம் இந்த தொகையை செலுத்துவதற்கு இணங்கியிருந்தார். | |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்ற பரிசோதனை செயற்திட்டத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 381,376 மீதி மற்றும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்கள் இரண்டில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 728,932 ஆன மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | **Air Quality Monitoring** மற்றும் **FP-83 EU Project** என்ற செயற்திட்டங்களின் மீதிகள் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்க நடவடிக்கை எடுக்கப்படும். **GIZ & ITI-SME Developments** செயற்திட்டம், **GIZ** மற்றும் **ITI** முறையே 70 சதவீதம் மற்றும் 30 சதவீத பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டியெ சயற்திட்டமான இருந்ததுடன், அந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக **GIZ** இலிருந்து ரூபா 2,770,722 தொகையான அளவு பணம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இந்த மீதி **ITI** இனால் செலவிட வேண்டியிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் போது இதற்காக தேவையான கணக்கீட்டு குறிப்புகளை இட்டு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகளை இயலுமான வரை விரைவாக அறவிடல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் தொடர்பான செயல் வழிக் கோவை கைநூலின் 6.6 ஆம் பந்தி. | (i) | மீளாய்வாண்டிற்குரிய வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் (60) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2023 யூன் 05 ஆம் திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்படுகின்ற தற்போதைய பொருளாதார வசதியீனத்தின் அடிப்படையில் வெற்றிடமான பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்புக்களை நாளது வரையாக்குதல் கைவிடப்பட்டமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஊழியர் பிரச்சினைகளின் அடிப்படையில் இவ்வாறு தாமதமடைந்திருந்தது. | குறித்துரைத்த திகதியில் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| | (ii) | கணக்காண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் (60) கணக்கு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் கணக்குகள் 02 மாதங்களும் 15 நாட்களும் தாமதமாகி 2022 மே 15 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | குறித்துரைத்த திகதியில் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற 03 வங்கி கணக்குகளில் ரூபா 2,443,512 மீதியொன்று காணப்பட்ட போதும், அந்த மீதி 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்துவதற்கோ அல்லது முதலீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 000–2876-229 கணக்கு, நிறுவனம் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றிணைந்து மேற்கொண்ட Coir செயற்திட்டத்திற்குரிய கணக்காக இருந்ததுடன், இந்த பணம் மீண்டும் பெற்றுக் கொள்வதற்க உரிய நிறுவனம் தற்போது வரையிலும் கோரியிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த தொகை எதிர்காலத்தில் நிறுவனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>000-9283-122 கணக்கு EEPEx செயற்திட்டத்திற்கு பயன்படுத்திய ரூபாய் கணக்கு ஆகும். இந்த செயற்திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளது.<br>76175979 என்ற இந்த கணக்கு GIZ செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட ரூபாய் கணக்கு ஆகும். இது இந்த ஆண்டில் இருந்து மீண்டும் பயன்படுத்தப்படுகின்றது. | செயற்பாடற்ற வங்கி கணக்கு மீதிகளை பயன்படுத்துவதற்கோ அல்லது முதலீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 27,510,988 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 47,679,836 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,168,848 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் ரூபா 33,433,968 இனால் அதிகரித்த போதிலும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வருமானம் ரூபா 36,105,423 இனால் குறைவடைந்தமையும், சேவை வருமானம் ரூபா 12,238,835 இனால் குறைவடைந்தமை மற்றும் மொத்த செலவினம் ரூபா 16,803,936 இனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியாக 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பேணிச் செல்லப்படுகின்ற கூட்டு மொத்தமான ரூபா 5,251,549 ஆன நிர்மாணங்களுகாக நிறுத்தி வைத்தலில் 20 மீதிகள் கணக்காய்வு திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுத்தி வைத்தல் மீதிகளுக்குரிய பணிகள் தொடர்பாக உத்தியோகத்தர்களின் உறுதிப்படுத்தலின் அடிப்படையில் மீண்டும் செலுத்துவதற்கோ அல்லது வருமானத்தில் சீராக்குவதற்கோ தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (ஆ) கொள்வனவு முற்பண மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 1,801,630 ஆன 08 வரவு மீதிகள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் முன்கொண்டு வரப்பட்ட போதிலும், அவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்ட P-020, PAL-011, PA-P030 மற்றும் PA-S008 என்ற 04 செலவு மீதிகள் தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. மிகுதி வழங்கல்களுக்காக செலுத்தப்பட்ட முற்பண தொகைக்காக பொருட்களை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது செலுத்தப்பட்ட முற்பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி ஒப்பந்த செயற்திட்டத்திற்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இருந்து முன்கொண்டுவரப்படுகின்ற கூட்டு மொத்தமான ரூபா 1,938,400 மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உணவு தொழில்நுட்ப பிரிவின் இந்த ஒப்பந்த செயற்திட்ட மீதி 2023 ஆம் ஆண்டின் போது வருமானத்திலும், திரண்ட நிதியத்திலும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

(ஈ) அபிவிருத்தியடைந்த நாடுகளில் உயர் மருந்து ஆய்வு கூடங்களுக்கு ஈடாக வசதிகளுடன் கூடிய ஜீஎல்பி (GLP) தரத்தை கொண்ட நவீன மருந்து ஆய்வுகூடமொன்று திறைசேரி நிதியேற்பாடுகளில் ரூபா 99,423,972 செலவில் நிறுவனத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் நாட்டில் உள்ள வைத்தியசாலை முறைமைகளையும் உள்ளடக்கிய சகல மேற்கத்தய மருந்து வழங்கல்கள் மற்றும் பகிர்ந்தளித்தலின் போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் மூலம் மேற்கூறப்பட்ட ஆய்வுகூடத்தில் விரிவான சேவையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கமான இலங்கையில் மருந்து பிரிவில் அபிவிருத்திக்காக சுயாதீன தரத்தையுடைய மூன்றாம் தரப்பினர் ஆய்வுகூடமாக இந்த ஆய்வுகூடம் இதுவரை பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் அதில் எதிர்பார்க்கப்பட்ட பிரதான நோக்கங்களுக்கிடையே ஔடதங்களை பகுப்பாய்வு செய்வதற்காக உள்நாட்டு / சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளிப்படையான நிலையமாக ஏற்படுத்துதல், துறைசார்ந்த மருந்துகளின் தேவையான சகல இரசாயன மற்றும் பௌதீக பகுப்பாய்வினை மேற்கொள்ளல், மருந்துகளின் மருந்து ஆய்வுகூடங்களில் உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற கம்பனிகளினால் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்து உற்பத்திகளை பரீட்சித்தல்களை முறைமைப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் வழிகாட்டல்கள் மற்றும் நிதி அனுசரணையின் அடிப்படையில் ஆய்வுகூடங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஆரம்ப பதிவு செய்தல் மற்றும் பின்னர் வருடாந்த பதிவிற்காக மருந்து உற்பத்திகளின் தரத்தன்மை தொடர்பாக மூன்றாம் தரப்பினரின் சுயாதீன பரிசோதனையை கட்டாயப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சு கொள்கை ரீதியான மாற்றங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருந்தது. சுகாதார அமைச்சின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு மருந்துகளை பரீட்சித்தல் தொடர்பாக ஒழுங்குபடுத்துதல் அதிகாரம் உள்ள அமைப்பாகும். மூன்றாம் தரப்பினரின் பரிசோதனை கட்டாயப்படுத்தப்படா மையால் மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் தமது உற்பத்திகளை பரீட்சிப்பதற்காக ITI இற்கு வருகை தரவில்லை. அதனால் உரிய ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் கட்டாய தேவையான அரசாங்கத்தின் மூன்றாம் ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | தரத்தன்மை தொடர்பாக தேசிய பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் மருந்துகளின் உள்நாட்டு ரீதியான பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டிகளை வலுப்படுத்துதலும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | தரப்பினரின் சுயாதீன பரிசோதனையை அமுல்படுத்துதல் தேவையாக இருந்தது. ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பில் மேற்கூறப்பட்ட மாற்றங்கள் அமுல்படுத்தப்படும் வரை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு பரிசோதனைக்கு மருந்துகள் உள்ளபடியான தேவைகளை விட சிறிய அளவு மாத்திரம் கிடைத்திருந்தது. | |
| (உ) | 2016 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய அமப/16/1576/19/96 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) ஒழுங்குபடுத்தலுக்கு இணங்க மூன்றாவது தரப்பினர் பெற்றோலிய உற்பத்தியில் பரிசோதனைகளை மேற்கொள்ளும் வகையில் உபகரணங்களை கைப்பற்றி கொள்வதற்கும், பொருத்துவதற்கும் ரூபா 117.7 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட பெற்றோலிய மற்றும் உராய்வு எண்ணெய் ஆய்வுகூடத்திற்காக பெற்றோலிய மாதிரிகளை பெற்றுக்கொள்ளும் திட்ட முறைமையொன்று வடிவமைக்கப்படாமையினால் ஆய்வுகூடத்தை ஸ்தாபித்தலின் அடிப்படை இலக்கு நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், தற்போது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பெற்றோலியத்தின் தன்மை தொடர்பாக பிரச்சனைகள் காணப்படுவதாக பொது மக்களின் அபிப்பிராயத்தில் நாட்டில் காணப்படும் போது | எங்களின் இந்த ஆய்வுகூடத்திற்காகவும் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை (Regularity Authority) அதிகாரம் இல்லாதிருந்தமையால் சகல மாதிரிகளும் எமது ஆய்வுகூடத்திற்கு கிடைக்கப் பெறுவதில்லை. இந்த செயற்பாடுகளின் ஆரம்ப நோக்கத்தில் காணப்பட்டதுடன் அது தேசிய தேவையாக இருந்தமையால் அதற்காக எரிசக்தி அமைச்சு மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பூரணமான அர்ப்பணிப்பின் அடிப்படையில் அமைச்சரவை தீர்மானத்தின் படி கூடிய விரைவில் செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பில் மேற்கூறப்பட்ட வேறுபாடுகள் அமுல்படுத்தப்படும் வரை கைத்தொழில் தொழில்நுட்ப | மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் திட்ட முறைமையொன்று தயாரித்து ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த செயற்பாடுகளுக்காகவும் ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வு கூடம் உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றியிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு உராய்வு எண்ணெய் பரிசோதனை தேவை உள்ளபடியாக மிகவும் குறைந்த அளவு மாத்திரமே கிடைத்திருந்தது. | |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிறுவனத்திற்கு சொந்தமான 486 தொழில்நுட்பங்கள் காணப்பட்ட போதிலும், அவ்வாறான தொழில்நுட்பத்தில் பௌதீக ரீதியாக ஆவணப்படுத்தல் அல்லது மென்பொருளாக குறித்துரைத்த பாதுகாப்பு கூடம் ஒழுங்கமைத்தல் இது வரை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அதில் சில தொழில்நுட்பங்கள் ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி குழுக்களுக்கு சொந்தமாக இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த ஆராய்ச்சியாளர்கள் நிறுவனத்தில் இருந்து விலகியமை/ ஓய்வு பெற்றுச் சென்றாமை/ மரணமடைந்தமை/ ஏனைய நிறுவனங்களுக்கு சென்றமை/ வெளிநாடு சென்றமை போன்ற சம்பவங்களின் அடிப்படையில் அந்த தொழில்நுட்பங்களும் நிறுவனத்திற்கு உரித்தற்று போகும் ஆபத்து காணப்படுகின்றமையும், இந்த தொழில்நுட்பம் நிறுவனத்திற்கு சொந்தமான கற்பனை சொத்தாக இருந்த போதும், புதிய தொழில்நுட்பத்தை கண்டறிதல்களின் பெறுமதியை இனங்காண்பதற்கு போதியளவான தகவலகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. மேலும், பொது மக்களின் பணம் மற்றும் பிரதானமாக மேற்கூறப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவுகள் மக்களுக்கு உரித்தற்று போனமை, தொழில்நுட்பத்தின் | தொழில்நுட்ப பரிமாற்றங்களை மேற்கொள்ளும் போது கொள்வனவாளர்களுக்காக தொழில்நுட்ப படிமுறைகள் அடங்கிய அறிக்கை விநியோகிக்கப்படுவதுடன், அதற்குரிய பிரிவுகளில் பாதுகாப்பாக காணப்படுகின்றது. மேலும் பரிமாற்றல்களுக்காக தயார் செய்தல் தொழில்நுட்ப முறைமை தொடர்பாக தரவு உத்தியோகத்தர்களின் அறிக்கை ஏடுகளில் பாதுகாப்பாக உள்ளதுடன், ஓய்வு பெற்றுச் செல்லும் போது அல்லது நிறுவனத்தில் இருந்து அவர்கள் விலகிய போது அந்த அறிக்கை ஏடுகள் பிரிவு தலைவரின் பொறுப்பில் இருந்தல் வேண்டும். எனினும், உங்களின் முன்மொழிவின் பிரகாரம் தரவு மாதிரிகளை களஞ்சியப்படுத்துவதற்கு தொழில்நுட்ப வங்கியொன்றை பேணிச் செல்லுதல் காலத்தின் தேவையாகும். | தொழில்நுட்பங்களை கண்டறிதல் உரிய பிரகாரம் ஒழுங்கமைக்க வேண்டியிருந்ததுடன், புதிய தொழில்நுட்பத்தை நாட்டில் நலன்களுக்காக பகிரங்கப்படுத்துவதற்கு முடியுமான வகையில் தொழில்நுட்பத்தை கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விளைவுகள் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படாமை போன்ற நிலைமையும் அவதானிக்கப்பட்டது. | | |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தற்போது மருந்துகளுக்குரிய பரிசோதனை சேவைகளை வழங்குவதற்காக நிறுவனத்திற்கு தேவையானதன் அடிப்படையில் மாலபயில் அமைந்துள்ள மருந்து தொழில்நுட்ப பிரிவு (Malabe Herbal Technology Section) உள்ள ரூபா 765,717 பெறுமதியான 02 UV Viewing Cabinet இயந்திர உபகரணங்களை உள்ளடக்கிய ரூபா 28,092,463 பெறுமதியான 10 இயந்திர உபகரணங்கள் செயற்பாடற்று காணப்படுவதுடன், கணக்காய்வு திகதியான 2023 யூன் மாதம் 16 ஆம் திகதி வரையிலும் அந்த இயந்திரங்களை பழுது பார்ப்பதற்கோ அல்லது பொருத்தமான பிரகாரம் கைதவிர்ப்பதற்கு இனங்காண்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | **Gas Chromatograph Mass Spectroscopy** இல் இதன் **PUMP** பகுதி **CHILLER** பழுதுபார்த்து 2023.07.04 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படுவதுடன், **Steam & Hydro Distillation Plan**t **50L** இயந்திரமும் பழுதுபார்க்கப்பட்டு 2023.07.10 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படுகின்றது. **Pilot Freeze Dryer** மற்றும் **GR Microwave System** இயந்திரத்தின் பகுதியை பழுதுபார்ப்பதற்கு பெறுகைகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய சகல சொத்துக்களும் பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பழுதுபார்த்தலை உரிய பிரகாரம் மேற்கொண்டு இயந்திர உபகரணங்களை செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், கைதவிர்க்கப்பட வேண்டிய சொத்துக்களை சரியாக இனங்காணல் வேண்டும். |
| (ஆ) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் மாலபே வளாகத்தில் அமைந்துள்ள PILOT PLANT ஸ்தாபிக்கப்பட்ட கட்டிடத்தில் 2,242 சதுர அடி அளவு மற்றும் 47 அலுவலக தளபாட | Pilot Plant கட்டிடத்தில் முதலாவது மாடியில் அறை இலக்கம் A7-27126 (191 சதுர அடி) உணவு தொழில்நுட்ப பிரிவில் தற்போது நடைபெறுகின்ற பயிற்சி நடவடிக்கைகளுக்காக | நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உபகணங்கள், 02 லெப்டொப் கணனிகள், பெக்ஸ் இயந்திரம் மற்றும் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு உபகரணங்களும் 2019 ஆம் ஆண்டில் இருந்து விளைவற்று காணப்பட்டது. | இடம் வழங்குவதற்காக ஈடுபடுத்துவதற்கு தயார் நிலையில் உள்ளது. எனினும், திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாணங்களின் பின்னர் குறித்துரைத்த இயந்திர கூடம் முறையாக பேணிச் செல்வதற்கு தேவையான பதவி அணியினரை ஆட்சேர்த்தல் மற்றும் ஏனைய மூலதன உபகரணங்கள் உரிய பிரகாரம் வழங்குவதற்கு வசதியீனம் ஏற்பட்டதன் அடிப்படையில் அந்த அறைகளில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலும், 2020 ஆம் ஆண்டில் இருந்து நாட்டில் காணப்படுகின்ற நெருக்கடியான நிலைமையின் அடிப்படையில் இந்த செயற்பாடுகளை சரியான பிரகாரம் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. இதில் கவனத்திற்கு உட்பட்ட **laptop** கணனி பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதுடன், அகற்றுவதற்கு கைதவிர்ப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள இரண்டு கணனிகள், வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வின் போது **obsolete** உபகரணமாக இனங்கண்டு அறிக்கையை நாளதுவரையாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் 392 ஆக இருந்த | 2022 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தினால் புதிய ஆட்சேர்ப்புக்கள் | தேவையான ஊழியர் எண்ணிக்கையை |

| | | |
|---|---|---|
| போதிலும், உள்ளபடியான பதவி அணியினர் 292 ஆக இருந்ததுடன், 39 பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் 100 ஆக காணப்பட்டது. | கைவிடப்பட்டமையால் தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 விநியோகிக்கப்பட்டமையால் சகல ஆட்சேர்ப்புக்களையும் நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும், புதிய ஆட்சேர்ப்புக்களுக்காக அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு பல தடவைகள் கோரப்பட்ட போதிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. பின்னர் அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவிற்கு கோரப்பட்டுள்ளதுடன், சில புதிய ஆட்சேர்ப்புக்களுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது உரிய பதவிகளுக்கான ஆட்சேர்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |